1982 மார்ச் 20]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படிச் சாலை விபத்துக்களில் மாண்டவர்களின் குடும்பங்களுக்கு உதவித் தொகை அளிக்கின்ற இந்தச் சிறப்பு மிகுத் திட்டம் எப்பொழுதிலிருந்து செயல்பட்டு வருகிறது ? இந்தத் தொகையை இறந்தவர்களின் குடும்பங்களுக்குக் கொடுக்கும்பொழுது, நீதிமன்றங்களில் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையில் அந்தப் பணம் கழித்துக் கொள்ளப்படுகிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இது 20—2—1978-லிருந்து முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியில் இருந்து கொடுக்கப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டு உள்ளது. இதிலே அவர்களுக்குக் கிடைக்கின்ற அந்த இழப்பீட்டுத் தொகையிலிருந்து கழிக்கப்படுவதாக சூழ்நிலை இல்லை, கழிக்காமல் இதைத் தனியாகக் கொடுக்கிறோம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படிக் கொடுக்கப்படும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை காவல் துறையினருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் எழுதி அதற்குப் பிறகு கிடைப்பதாலே கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, விபத்தில் மாண்ட உடனேயே இந்தத் தொகையைக் கொடுக்கின்ற அளவிற்கு வழி வகை செய்ய பரிசிலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அரசினுடைய சட்டப்படி இறந்தவர்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இறந்திருக்கிறார்கள், தகுதி என்ன, அந்தப் பணத்தை யாரிடத்தில் கொடுப்பது, அந்தப் பணத்தைப் பெறக் கூடிய தகுதி படைத்தவர்கள் யார் என்ற இவைகளை எல்லாம் பார்த்து தான் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இறந்த உடனேயே கொடுக்க வேண்டுமென்றால் யார் யாரோ வாங்கிக் கொண்டு போவார்கள். ஆகவே தான் பார்த்துக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால்தான் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது.

மாணவர்களுக்கு வழங்கப்படும் பஸ் கட்டணச் சலுகை :

* வினா எண். 580 :—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா :

போக்குவரத்துக் கழகங்களில் மாணவர்களுக்கு வழகங்ய படும் பஸ் கட்டணச் சலுகையால் ஏற்படும் இழப்புத் தொகைப் அரசிடமிருந்து பெறப்படுகிறதா ?

[1982 மார்ச் 20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாணவர்களுக்கு வழங்கப்படும் பேருந்துக் கட்டணச் சலுகையால் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்படும் இழப்புத் தொகையில் ஒரு பகுதியை அக்கழகத்திற்கு அரசு ஈடு செய்து கொடுக்கிறது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிக் கட்டணச் சலுகை கொடுப்பதால் 1981-82 ஆம் ஆண்டில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்பட்ட இழப்புத் தொகை எவ்வளவு என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, நாம் இப்பொழுது கொடுத்திருக்கின்ற அந்தக் கட்டண முழுத் தொகை 5 கோடியே 40 இலட்சம் ரூபாய். அதிலே அந்த மாணவர்களிடத்தில் வசூலிக்கும் தொகை 1 கோடியே 35 இலட்சம் ரூபாய். எனவே, நமக்கு ஏற்படும் நஷ்டம் 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டுக்கு மட்டும் நஷ்டம் ஏற்படும் என்று கணக்குப் போட்டிருக்கிறோம். இது வரைக்கும் அரசாங்கத்திலிருந்து போக்குவரத்துக் கழகத்திற்கு ஈட்டுத் தொகையை, ஒரு பகுதி தொகையைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிச் சென்னை நகரத்திற்கு மட்டும் இது போன்ற கட்டணச் சலுகை இருப்பதாக அறிகிறேன். இந்தச் சலுகையை சென்னைக்கு அப்பாலுள்ள மாவட்டங்களில் உள்ள நகரங்களுக்கும் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஏற்கனவே எல்லா இடங்களிலும் இருக்கிறது. சென்னை மாநகரத்தில் கொஞ்சம் அதிகமாகச் சலுகை இருக்கிறது ; மற்ற இடங்களில் கொஞ்சம் குறைவாக இருக்கிறது. சலுகை இல்லாத இடம் என்று சொல்ல முடியாது. இங்கே 66 சதவீதம் என்றால் அங்கே 33.33 சதவீதம் அவர்களுக்குச் சலுகை தரப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலே 50 சதவீதம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு பஸ் கட்டணத்தில் சலுகை அளிக்கப்படுகிறது. ஆனால் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் காட்பாடியிலிருந்து வேலூருக்கும், காட்பாடியில்

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1982 மார்ச் 20]

இருந்து குடியாத்தத்திற்கும் இந்தச் சலுகை இல்லையே. ஆகவே அந்தப் போக்குவரத்துக் கழகமும் இந்தச் சலுகையை அளிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலேயும் நாம் அந்த சலுகையைக் கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அது சம்பந்தமான குறிப்பு இங்கே இருக்கிறது. கொடுத்திருக்கிறோம்.

1972 ஆம் ஆண்டுக்கு முன்பு கண்டக்டர் லைசன்ஸ் பெற்றவைகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம்.

*வினா எண் 581—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1972 ஆம் ஆண்டுக்கு முன்பு கண்டக்டர் லைசன்ஸ் பெற்ற கண்டக்டர்களுக்கு அரசு போக்குவரத்துக் கழகங்களில் கல்வித் தகுதி, வயது வரம்பு பாராமலும் வேலை கொடுக்க அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமுலாகும் ?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடம் இல்லை.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972-க்கு முன்னால் அரசால் வழங்கப்பட்ட கண்டக்டர் லைசன்ஸ் வைத்திருப்பவர்கள், அரசு போட்டிருக்கும் உத்தரவின் காரணமாக கல்வித் தகுதியின் அடிப்படையில் லைசன்சு வழங்கப்படும் என்று வழங்கியதற்குப்பின்னால் 10 ஆண்டுகள், 5 ஆண்டுகள் தனியார் நிறுவனங்களிலே வேலை பார்த்து கண்டக்டர்கள் நூற்றுக்கணக்கான பேர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்களே, அவர்களுக்கு அந்தத் தகுதியைக் கொடுத்து, அது நாம் கொடுத்தலைசன்சு என்ற காரணத்தினால் அதை மறுபரிசிலனை செய்து நமது போக்குவரத்துக் கழகங்களில் எடுத்துக் கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.